I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.3
OS.NO.56/2018(C/w.24/2019,66/2019,57/2019)
Joint Trial

**Name** : Dhanalakshmi
**Father/Husband Name** : Panneerselvam
**Age** : 55

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.06.2025

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 05.25 p.m

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

கோவிந்தசாமி கவுண்டர் என் தாய் மாமா ஆவார். என் மாமனார் பெயர் சாம்பசிவம். என் மாமனாருக்கு கோவிந்தசாமி எதாவது சொத்து விற்றாரா என்றால் விற்றார். 1992 ல் அவருடைய 3வது பெண் கல்யாணத்திற்காக வீடு விற்றார். அது பாக பாத்திய அக்கு விடுதலை பத்திரம்.அந்த பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.இதுவா என்று பார்த்து சொல்லுங்கள் என்றால் சாட்சி பார்த்து விட்டு இதுதான் என்று ஒப்பு கொண்டார். அது **Ex.B4** ஆகும்.

என் தாத்தா ஆதிமூல கவுண்டர் மகன் கோவிந்தசாமி கவுண்டர் எனது மாமனார் சாம்பசிவ கவுண்டருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் 17.10.1994 தேதியிட்டது அது Ex.B.5 ஆகும். அந்த 2 பத்திரத்திலும் கோவிந்தசாமி கவுண்டர் சொத்துக்களை எல்லாம் கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பாக பிரிவினை கூரச்சீட்டு முன்னிலைக்கு அவரவருக்கு வந்த பாகத்தை அவரவர்கள் அனுபவித்து

வந்தார்கள் என்றால் சரிதான். கலா வகையறா அனைவரும் கோவிந்தசாமி கவுண்டர் வாரிசுகள் என்றால் சரிதான். அதாவது 4 மகள்கள் 1 மகன். (அதாவது கலா வகையறா). தனலட்சுமியின் கணவர் ரவி கோவிந்தசாமி கவுண்டரின் மகன் ஆவார். அவர் இறந்துவிட்டார். அவருடைய முழு பெயர் ரவிகுமார் என்றால் ரவி என்று தான் கூப்பிடுவார்கள்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம்:** 05.40 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.